Issued—19-5-1962]

2863

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

THURSDAY, 7TH DECEMBER 1961

VOLUME XLIX—No. 1

LIBRARIAN, SECRETARIAT LIBRARY
GOVERNMENT OF MADRAS

CONTENTS

	PAGES.
I Obituary References to Sri S. K. Govindaraja Nayagar and Sri O. Chengam Pillai, Ex-M.L.As.	1
II Questions and Answers	1–56
III Government Motion—	
Transaction of Government Business on a Non-Official Day ..	56
IV Government Bills—	
(1) The Madras Local Authorities Finance Bill, 1961 (L.A. Bill No. 34 of 1961).	56
(2) The Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Bill, 1961 (L.A. Bill No. 47 of 1961.	56–93
(3) The Madras Gift Goods (unlawful possession) Bill, 1961 (L.A. Bill No. 52 of 1961).	93–98
V Announcement—	
Business of the House	98
VI Papers laid on the table of the House	98–103

©
GOVERNMENT OF MADRAS
1962

Legislative Assembly Department
Madras

PRICE, 50 *naye Paise*]

7th December 1961]

பொறுத்தும் இருக்கிறது ஒருவரைப் போடுவது, ப்ரின்ஸிபாலா, டைரக்டரா என்பது அல்ல. தகுதியான நபராக இருந்தால், அவர் ப்ரின்ஸிபாலாக இருந்தாலும் நன்முக இருக்கும்; டைரக்டராக இருந்தாலும் நன்முக இருக்கும்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the Principals of the College whoever they might be were handling classes for the Law College students, whereas the Honorary Director of Legal Studies is not at present handling any classes? So, will the Government think of the possibility of employing a Principal instead of the Director of Legal Studies so that he would be enabled to handle classes and thus enrich the legal knowledge of the students?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I thought that the Honorary Director was taking a few classes and not as many classes as the Principals were taking and I do not know the present position. I know that he was taking a few classes. As I have already stated, the question of the set-up from the next academic year is under the consideration of the Government.

Tamil Medium in schools

* 2135 Q.—SRI N. MARUDACHALAM (on behalf of SRI N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of schools in the State wherein Tamil medium is introduced; and

(*b*) the number that will be brought under the Tamil medium during the academic year 1961–62?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) In 1,185 schools as on 31st March 1961.

(*b*) Two hundred and forty-nine schools that have been opened in 1961–62 provide instruction through Tamil medium.

SRI K. ANBAZHAGAN : *தலைவர் அவர்களே, எல்லா உயர் நிலைப் பள்ளிகளிலும் தமிழையே பாடமொழியாக மேற்கொண்டு, தமிழ் மூலமாகவே பயிற்சி அளித்துவருவது இப்பொழுது நடை முறையில் உள்ளது அல்லவா? அதிலே விதிவிலக்கு அளிக்க என்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன? யார் எந்த மொழியில் பாடம் போதிக்கப்படவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதன் படி அனுமதி அளிக்கப்படுகிறதா?*

THE HON. SRI C. SUBRAMANIAM : *மொழிவாரி சிறு பான்மையினருக்குச் சில சலுகைகள் கொடுக்கவேண்டும் என்பது பற்றி சமீபத்தில் செய்யப்பட்ட முடிவுகள் கனம் அங்கத் தினருக்குத் தெரிந்திருக்கலாம். அந்த அடிப்படையில், தமிழ் அல்லாமல் தெலுங்கு, ஆங்கிலம், மலையாளம், உருது, இந்தி, குஜராத்தி ஆகிய மொழிகளில் பாடம் சொல்லிக்கொடுப்பதற்கும் நாம் இப்பொழுது அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆகவே,*

தேவையை அனுசரித்து, தமிழ் அல்லாத மற்ற மொழிகளிலும் பாடம் சொல்லிக்கொடுக்க அனுமதி தரப்படுகிறது. பொதுவாக இருக்கும் நம்முடைய திட்டம், தமிழ் மொழிமூலமாகத்தான் உயர்நிலைப் பள்ளிகளில் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, இப்பொழுது மத்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டின்படி, ஆங்கிலத்தின்மூல மாகவும் பாடம் நடத்தப்படவேண்டும் என்று அதற்கும் வகுப்புக் கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா? அம்மாதிரி எத்தனை பள்ளி களில் வகுப்புக்கள் ஒதுக்க அமைச்சர் அவர்கள் இசைந்திருக் கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதற்கென்று வகுப்புக்கள் ஒதுக்கவேண்டுமென்று எந்த விதமான சிபார்சும் அங்கிருந்து வரவில்லை. ஆனால், மொழி சிறு பான்மையினருக்குப் புதிய சலுகைகளைக் கொடுக்கவேண்டு மென்று நாமே முடிவு செய்திருக்கிறோம். நாம் செய்த முடிவைத் தான் மற்ற இடங்களுக்கும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார் கள். அந்த அடிப்படையில்தான், சில இடத்தில் ஆங்கிலம் பேசு கின்றவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு வகுப்புக்குப் போதுமான அளவு இருந்தால் ஆங்கிலத்தில் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற் பாடு செய்யப்படுகிறது. தற்பொழுது, தமிழ் அல்லாது தெலுங்கு, ஆங்கிலம், மலையாளம், உருது, இந்தி, குஜராத்தி முதலிய மொழி கள் எல்லாவற்றிலும் சேர்ந்து 91 பள்ளிக்கூடங்களில் பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

SRI K. VINAYAKAM: On what principles, some schools are permitted to instruct subjects through the English medium? Also is the Hon. Minister aware that there is a crazy rush for these English-medium schools, from the children belonging to the high strata of society?

THE HON. SRI C. SUBRAMANIAM: That is the individual preference and we cannot prevent anybody trying to learn English or trying to learn through English. That is quite a different thing. Now we provide facilities for children belonging to the linguistic minorities to be taught in a language other than Tamil. As I have already stated, in 91 schools we have provided these facilities.

SRI K. ANBAZHAGAN: பிற மொழி பேசும் சிறுபான்மை யினருக்கு இந்த வசதிகள் அளிக்கப்படுவது தமிழ்நாட்டின் எந்த எந்த மாவட்டங்களில், எந்த எந்தப் பகுதிகளில் என்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? 'ரீஜியன்ஸ்' அதற்காக ஒதுக்கப் பட்டிருக்கின்றனவா?

THE HON. SRI C. SUBRAMANIAM: 'ரீஜியன்ஸ்' ஒதுக்கப் படுவதில்லை. எங்கெங்கு இதுபோன்று மைனரிடியினர் இருக் கின்றார்களோ, எங்கெங்கு குழந்தைகள் போதுமான எண்ணிக்

7th December 1961]

கையில் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் இந்த வசதி அளிக்கப் படுகிறது. முக்கியமாக, பெரிய நகரங்களில்தான் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. நகரங்களில், தொழில்கள் காரணமாகவும் வியா பாரங்களின் காரணமாகவும், உத்தியோகஸ்தர்கள் வசிப்பதன் காரணமாகவும் பல்வேறு பகுதிகளில் பல மொழிகள் பேசுகின்ற வர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு இத் தகைய ஏற்பாடு செய்யவேண்டியதாக இருக்கிறது.

ஆந்திரா–தமிழ்நாடு, கேரளா–தமிழ்நாடு எல்லைப் பகுதி களிலும் இந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. அங்கே போதுமான அளவு மற்ற மொழிகளிலும் பாடம் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

Sri R. SRINIVASA IYER : தமிழில் பாடம் சொல்லிக்கொடுக் கக்கூடிய பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கக் கூடாது என்று தடை இருக்கிறதா? அப்படி தடை விதிக்கப்படா விட்டால், சில வகுப்புக்களில் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்க லாம் என்ற அனுமதி உண்டா? ஆங்கிலத்தில் பாடம் சொல்லிக் கொடுப்பதாயிருந்தால், சர்க்காரிலே மான்யம் கொடுப்பதில்லை என்ற விதி ஏதாவது இருக்கிறதா?

The Hon. Sri C. SUBRAMANIAM : நம்முடைய பொதுவான நிட்டம் இப்பொழுது, தமிழ் மூலமாகத்தான் உயர்நிலைப் பள்ளி களில் பாடம் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்பது. ஆங்கிலத் தில் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்றால், அதற்குச் சர்க்கார் அனுமதி பெற்றுத்தான் ஆங்கிலத்தின் மூலமாகப் பாடம் சொல்லிக்கொடுக்க முடியும். அம்மாதிரி அனுமதி பெறுமல் இருந்தால் அந்தப் பள்ளிக்கு 'ரிகக்னிஷன்' கிடைக் காது.

Entertainment Tax

* 2136 *Q.*—**Sri A. A. RASHEED** : Will the Hon. the Minister for Finance be pleased to state the total amount of loss in 1960–61 due to the evasion of entertainment tax by the persons running touring cinemas?

The Hon. Sri C. SUBRAMANIAM : Evasion of entertainment tax when detected is collected and a sum of Rs. 17,831·67 was collected in 1960–61 as a result of detection. The loss on account of non-detection of evasion cannot be estimated.

Sri A. A. RASHEED : May I know whether any of the Hon. Ministers caught red-handed managers of the touring cinemas while the tickets were sold without entertainment tax?

The Hon. Sri C. SUBRAMANIAM : So far Ministers have not been assigned this duty.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that the Hon. Minister for Industries caught one of the managers while the ticket was sold without entertainment tax?